# மக்கள் பிரதிநிதிகள் வரி செலுத்துவோர் மற்றும் பிரதேச சபை

ஸ்ரீயானி விஜேசுந்தர
நல்லாட்சி மற்றும் ஊழல் எதிர்ப்பு செயற்திட்டம்

மக்கள் பிரதிநிதிகள் வரி செலுத்துவோர் மற்றும் பிரதேச சபை

முதற் பதிப்பு - ஆகஸ்ட் 2011

வெளியீடு - மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக்கொள்கை நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பொன்றாவதோடு பிரதானமாக அரசாக்கம், முரண்பாடுகளை தீர்த்தலும் அதனுடன் இணைந்த முரண்பாடுகளின் பால் அவதானம் செலுத்தும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் 1996ம் ஆண்டு அமைக்கப்பட்டதற்கான காரணம் பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாசனைக்கான சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கையை கொண்டுள்ளது. பொது மக்களின் கொள்கை விமர்சண ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்று வழிகளை இணங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பாக ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணித்துள்ளது.

# மக்கள் பிரதிநிதிகள் வரி செலுத்துவோர்
# மற்றும்
# பிரதேச சபை

முதற்பதிப்பு - 2011 ஆகஸ்ட்

நெறிப்படுத்தல் - ஸ்ரீயாணி விஜேசுந்தர

இவ் வெளியீட்டிற்கு உதவி புரிந்த லக்ஷ்மி ராஜேந்திரன் மற்றும் மஞ்சுள கஜநாயக்க போன்றோருக்கு எனது நன்றிகள்

## பிரதேச சபை மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல்

இலங்கையில் காணப்படும் நிர்வாக கட்டமைப்புக்கள் மூன்றில் மூன்றாவது கட்டமைப்பாக உள்ளூராட்சி மன்றங்கள் (Local Government) காணப்படுவதோடு பிரதேச நிர்வாகம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது. மேலும் இக் கட்டமைப்பு மாநகர சபை (Muncipal Council) நகர சபை (Urban Council) மற்றும் பிரதேச சபை (Divisional Council on Pradhashiya Sabha) என்றவாறு மேலும் மூன்று உப பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றது.

இக்கையேட்டின் ஊடாக மக்களுக்கு நெருக்கமானதும் மிக சிறியதுமான மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கும் அமைப்பான பிரதேச சபைகளைப் பற்றி மட்டுமே அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பிரதேச சபையானது மிகச் சிறிய மக்கள் பிரதி நிதிகள் அமைப்பாக இருந்தாலும் 1987ம் ஆண்டு 15ம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டரீதியான ஒரு அமைப்பாகும். விடயப்பரப்பு மற்றும் கடமைகள் அச் சட்டத்தின் மூலம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச சபை ஒன்றின் அடிப்படை கடமையாக இருப்பது சபைக்குரிய விடயப்பரப்பிற்குள் உள்ளடங்கும் உப விதிகளை (bylaws) தயாரித்து தமது கடமைகளை நெகிழ்ச்சியுடனும் பொறுப்புடனும் நிறைவேற்றுவதாகும். இப் பொறுப்புகளில் பிரதானமான கடமையாக இருப்பது பிரதேச சபைக்குறிய வருடாந்த அபிவிருத்தி திட்டத்தை பங்களிப்பு முறையினூடாக அடையாளம் காணப்பட்ட பொது தேவைப்பாடுகளின் அடிப்படையில் தயாரித்து அதற்கு தேவையான வரவு, செலவு திட்டத்தை தயாரித்தல், நிறைவேற்றல் மற்றும் நடைமுறைப்படுத்துவதாகும்.

இதற்கு மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புக் கூறவேண்டும். இங்கு தவிசாளர் மற்றும் ஏனைய பிரதிநிதிகளுக்கு பாரிய கடமைகள் உள்ளன. அதன் அடிப்படையில் பிரதேச சபையொன்றின்

தவிசாளரின் நடவடிக்கையானது நிறுவணத்தின் செயற்பாட்டிற்கும் அதனூடாக சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொது மக்களின் செயற்பாடுகளுக்கும் பெரிதும் தேவைப்பாடுடையதாகும்.

**தலைவர்- பிரதம நிறைவேற்றதிகாரியின் கடமைகள்**

தலைவரானவர் ஒரு புறத்தில் சபையை வழிநடத்தும் பிரதான நபர் ஆவார். அதன் அடிப்படையில் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்குரிய கொள்கைரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் செயற்பாட்டிற்கு தலைமைத்துவத்தை வழங்குவது இவரே. மறுபுறம் நிறுவணத்தின் பிரதம நிறைவேற்றதிகாரியுமாவார் (பிரதேச சபை சட்டம் 8 (1) உறுப்புரை) அதன்படி சபையினால் எட்டப்படும் தீர்மாணங்களை நடைமுறைப்படுத்தும் கடமையை மேற்கொள்பவர் இவரே. தலைவரானவர் பிரதேச சபையின் கொள்கை ரீதியான தீர்மாணங்களை மேற்கொள்ளல், அத்தீர்மாணங்களை நடைமுறைப்படுத்தல் ஆகிய இரண்டு செயற்பாடுகளையும் இணைக்கும் ஒருவராகவும் செயற்படுவார்.

தவிசாளர் தமது அதிகார பிரதேசத்தின் முதற்பிரஜை என்ற வகையில் பிரதேசத்தின் பல்வேறு வைபவங்களில், சன சமூக அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் விசேட நபராக கலந்துகொள்வதற்கும், தமது அதிகார பிரதேச எல்லைக்குள் வருகை தரும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிதிகள் மற்றும் பிரபுக்களை வரவேற்பதும் இவரது கடமையாகும்.

இதற்கு மேலதிகமாக, தவிசாளர், சபையின் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் முதல்மை நிதி நடவடிக்கை அதிகாரியும் (Chief Accounting Officer) ஆவார். அதன்படி தலைவர் நிறுவனத்தின் அணைத்து நிதி நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்வாளருக்கும் அவறூடாக மாகாண சபைக்கும், பாராளுமன்றத்திற்கும் பொறுப்புக் கூறவேண்டும்.

இதனால் குட்டி அரசாங்கத்தின் வரவு, செலவுத்திட்ட தயாரிப்பு, நிறைவேற்றம் மற்றும் நடைமுறைப்படுத்தல் போன்ற அனைத்துச் செயற்பாட்டின் போதும் தலைவரின் பொறுப்பு கூறல்

அத்தியவசியமானதாகும். அப்படியாயின் ஏப்ரல் 15 - ஆகஸ்ட் 15 வரை வரவு செலவு திட்ட அட்டவணையை தயாரித்தல் (பி.ச. சட்டம் 168 - 170) அதே போல் பெரும்பாலான மக்களின் பங்களிப்பூடாக பெற்றுக் கொள்ளும் யோசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் வரவு செலவு திட்டத்தை சபைக்கு முன்வைத்தல், சபையால் நிறைவேற்றல் (நவம்பர் 30 - டிசம்பர் 15 வரை) மற்றும் நடைமுறைப்படுத்துவதாகும். இறுதி நடவடிக்கையான வரவு செலவு திட்டக் கணக்காய்வு நடவடிக்கையானது மேலும் பொறுப்புமிக்க ஒரு கடமையாகும். (பி.ச. சட்டம் 172வது உறுப்புரை) அதாவது வரவு செலவுத்திட்ட நிதி ஆண்டின் மொத்தச் செலவுகளின் இறுதி நிதி அறிக்கை அடுத்த ஆண்டின் மார்ச் 31 இற்கு முன் கணக்காய்விற்காக முன்வைக்கப்பட வேண்டும். முன் வைக்கப்பட்ட நிதி அறிக்கைக்காக அவ்வருடத்தின் யூலை ஆகஸ்ட் காலப் பகுதியில் கிடைக்கப்பெறும் கணக்காய்வு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களை (Audit Quaries and boservations) சபைக்கு முன்வைப்பதோடு அதனூடாக, சபை உறுப்பினர்களையும் குழு உறுப்பினர்களையும் தெளிவுபடுத்த வேண்டும். கணக்காய்வு அபிப்பிராயம் கிடைக்கப்பெற்று 13 நாட்களுக்குள் அவற்றுக்கான தீர்வுகளை கணக்காய்வாளருக்கும், உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கும் உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கும் பிரதிகள் செய்து ஒப்படைக்க வேண்டும். அத் தகவல்களினால் கணக்காய்வாளர் திருப்தி அடையவில்லையெனில் 14 நாட்கள் தொடக்கம் 1 மாத காலப்பகுதியினுள் மீண்டும் அக் கணக்காய்வு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்கள் பற்றிய கணக்காய்வாளரின் கருத்து தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும். அப்போதும் உரிய பதில் கிடைக்க வில்லையெனில் அக்கருத்துக்களும் அபிப்பிராயங்களும் பிரதேச நிதிக் குழுவிற்கும் பாராளுமன்ற நிதிக் குழுவிற்கும் அறிவிக்கப்படும். அதே வேலையில் கணக்காய்வாளரினால் சட்டத்திற்கு முரணான மற்றும் சட்ட ரீதியற்ற கொள்வனவு என்ற தீர்மானத்தின் அடிப்படையில் தலைவருக்கு எதிராக மேலதிக கட்டண அறிக்கையொன்று (Surcharge certificate) உள்ளூராட்சி ஆணையாளருக்கு பிரதி செய்து அனுப்பப்படும். இது தொடர்பாக தலைவருக்கு உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண

சபை அமைச்சின் செயலாளரிடம் மேல் முறையீடு ஒன்றை முன் வைக்க முடியும். அதன் பிறகு அமைச்சின் செயலாளரினால் நடத்தப்படும் மேல் முறையீட்டு விசாரணையூடாக பிரதேச சபை சட்டத்தின் 172 உறுப்புரையின் படி இறுதி தீர்மானம் முன்வைக்கப்படும். எப்படியாயினும் தலைவரினால் மேன்முறையீடு முன்வைக்கப்படவில்லை எனில் அல்லது மேலதிக கட்டணம் செலுத்த வில்லையெனில் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் உரிய நிதியை பெற்றுக்கொள்ளும் முகமாக குறிப்பிட்ட தலைவருக்கெதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**இவையனைத்திற்கும் மேலதிகமாக தலைவரின் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டிய வேறு கடமைகள் பல.**

- பொதுச் சபைக் கூட்டத்தை நடாத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- அதற்கான சட்டரீதியான ஏற்பாடுகளை நிறைவேற்றல் (கூட்டத்திற்கான அழைப்பு அறிவித்தல், நிகழ்ச்சி நிரல், காலம் வழங்கப்பட்ட யோசனைகள், காலம் வழங்கப்பட்ட கேள்விகள் போன்றவை தொடர்பாக சட்டத்தின் அடிப்படையில் செயற்படுதல்)
- பொதுச் சபைக் கூட்டத்தை வழிநடத்தல் (கூட்டத்தின் கௌரவம் மற்றும், ஒழுக்கத்தையும் பாதுகாத்தல் உறுப்பினர்களுக்கிடையில் ஒழுக்கத்தை வழி நடத்துதல்)
- கூட்டங்களில் கலந்துரையாடல்கள் சிறப்பானதாகவும் ஆரோக்கியதாகவும் அமைவதற்கு தேவையான பங்களிப்பை பெற்றுக் கொடுத்தல்.

**அதே போல் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் தமது அவதானத்தை செலுத்த வேண்டிய கடமைகள் பல.**

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக தலைவர் மேற்கொள்ள வேண்டிய பிரதானமான கடமையாவது சபையின் தீர்மாணங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழி நடத்தலை பெற்றுக் கொடுத்தலாகும்.

இங்கு நிறைவேற்று அதிகாரியாக தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் நேரடியாக பொது மக்களுக்கு பொறுப்புடைய மற்றும் பொறுப்பு கூற வேண்டும். அதற்கென தலைவர் தமது உறுப்பினர்களை உரியமுறையில் வழிநடத்தி சபையின் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியதோடு அவற்றை மேற்பார்வைக்கும் மதிப்பாய்விற்கும் உட்படுத்தல் வேண்டும்.

தலைவரைப் போலவே சபை உறுப்பினர்களும் தமது தனிப்பட்ட அரசியல் மற்றும் சமூக ரீதியில் காணப்படும் தொடர்புகளை சமமான நிலையில் நிர்வாகம் செய்வதோடு மக்களின் எதிர்ப்புக்கு ஆளாகாது செயற்பட வேண்டும். அதேபோல் சபைக்குறிய வளங்கள் (நிதி, இயந்திர உபகரணங்கள், மனித வளம், தொழிலுட்பம் மற்றும் காலம்) வரையறைக்கப்பட்டிருப்பதை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். இதனால் உச்ச மக்களின் பங்களிப்புடன் முறையான திட்டங்களுடனும் நிர்வாகத்துடனும் இவ்வறையரையை வெற்றி கொள்ள வேண்டும்.

தேசிய மட்ட அரசியலில் நுழைவதற்கான ஆரம்பம் பெரும்பாலும் உள்ளூராட்சி மன்றங்களினூடாக இடம் பெறுவதால் பிரதேச அரசியலில் மக்கள் பிரதி நிதிகளுக்கு பாராளுமன்றம் வரையான நீண்ட தூர பயணக் கனவை அடிப்படையாக கொண்ட தனிப்பட்ட எதிர்பார்ப்புகள் பல இருக்க கூடும். ஆயினும் இங்கு மிக முக்கியமாக கருத்திற்கு கொள்ளப்படுவது சபையின் சட்ட ரீதியான வரைவுகளுக்குள், சபையின் சட்டதிட்டங்கள் தொடர்பாக மிகத்தெளிவுடனும், பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் சபையின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதாகும்.

சபையின் கடமைகளில் பிரதம நிறைவேற்று அதிகாரியாகிய தலைவரைப் போலவே உறுப்பினர்களுக்கும் கொள்கை தயாரிப்பு, செயற்பாடுகளை முன்னுரிமைப்படுத்தலில் தீர்மாணம் எடுத்தல் மட்டுமல்லாது நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பங்கு பற்ற வேண்டி வரும். எனவே மக்கள் பிரதி நிதிகள் மற்றும் சபையின் அதிகாரிகளுக்கிடையில் சுமூகமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆரம்பத்தில் இருந்து செயற்படவேண்டும். இதற்கென இவ்விரு பிரிவினரினதும் கடமைகள் தொடர்பில் தெளிவான விளக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பிரதேச சபையின் விசேட தன்மையை வழிநடத்திச் செல்லல் தொடர்பில் பிரதேச சபையின் அதிகாரிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் பாரிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. சபையானது மக்களினது நிறுவனம் என்பதால் அதை உரியமுறையில், திறமைமிக்கதாக மற்றும் பலன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிநடத்தல்களை மேற்கொள்வதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கடப்பட்டுள்ளனர். அவர்கள் அடிப்படையாக பொறுப்புக் கூற வேண்டியது அரசிற்கோ, மாகாண சபைக்கோ, அல்லது வேறு நிறுவனங்களுக்கோ அல்ல மாறாக தாம் பிரதி நிதித்துவம் செய்யும் தம்மை தெரிவு செய்ய பொது மக்களுக்கேயாகும்.

அதேபோல் ஒட்டுமொத்த பிரதேச சபையின் செயற்பாடுகள் மற்றும் சிறப்பம்சங்களாவன சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மாணங்களின் அடிப்படையில் தலைவரின் நிறைவேற்று வழிகாட்டலின் திறமையூடாகவே தங்கியுள்ளது.

எனவே தலைவருக்கு பாரிய பொறுப்புக்கள் இருக்கின்றன. பிரதேச சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக ஒப்படைக்கப்படும் பொறுப்புக்கள் மிக பாரதூரமாக இருப்பதோடு பொறுப்புக்களை உரிய முறையில் தெளிவுபடுத்திக் கொண்டு அதற்கென உரிய முன் ஆயத்தங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

1. பிரதேச சபை சட்டம் மற்றும் அதன் திருத்தங்கள் அணைத்தும் தொடர்பில் தெளிவையும் பெற்றிருப்பதோடு சபையின் அனைத்து செயற்பாடுகளையும் வழிநடத்தல்.

2. அந் நிறுவனத்தின் ஊழியர்கள் தொடர்பான முழுமையான மேற் பார்வை

3. நிறுவணத்திற்குரிய அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் தொடர்பாண முழுமையான மேற்பார்வை

4. பொதுசபைக் கூட்டம், செயற்குழுக்கூட்டம் ஏற்பாடு செய்தல் மற்றும் அதற்குத் தேவையான உதவிச் சேவைகள் வழங்குவது தொடர்பில் தொடர்பாடல்களை மேற்கொள்ளல்.

5. நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகள் தொடர்பிலான அனைத்து விடயங்களையும் வழி நடாத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

6. பிரதான சட்டங்களினாலும் வேறு சட்டங்களினாலும் ஒப்படைக்கப்படும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல். உதாரணம்:- வீதிகள், மக்கள் சுகாதாரம், மயானபூமி, நகர திட்டங்கள் மற்றும் மக்கள் பாவனை சேவை.

7. வேறு நிறுவனங்களால் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல். உதாரணம்: சுற்றாடல் நடவடிக்கைகள், நகர அபிவிருத்தி நடவடிக்கைகள்.

8. தமது மக்களுக்கு நெகிழ்வுத்தன்மையுடனும் அது தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்த ஒரு பிரச்சினைக்கும் பொறுப்புடன் பதிலளிக்கக் கூடியவகையில் சபையின் பல்வேறான செயற்பாடுகளையும் சேவைகளையும் வழங்குதல். பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வது தொடர்பில் ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

9. பிரதேச சபையின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மற்றும் ஏனைய அரச சார்பற்ற, மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்புகளை பின்பற்றுதல்.

10. பிரதேச சபையின் அனைத்து செயற்பாடுகள் தொடர்பில், கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி ஒத்துழைப்பு வழங்கல்.

11. பிரதேச சபையின் சட்ட ரீதியான மற்றும் நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பில் அவதானத்துடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

12. மக்களின் கருத்துக்கள், முறைப்பாடுகள், தொடர்பில் அவதானத்தை செலுத்தி தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

13. தமது சபை உறுப்பினர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் நடு நிலையான தொடர்பாடலை மேற்கொள்ளல்.

14. பாராளுமன்றம், நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், மாகாணசபை, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சு, நீதிமன்றம், கணக்காய்வாளர் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கும் தேவையான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**தலைவரின் திறமையான வழிகாட்டல் நடவடிக்கையின் போது பல காரணிகள் மேலும் தமது அவதானத்திற்கு உள்வாங்கப்பட வேண்டும்.**

- பிரதேச சபையானது நாட்டின் அரசியல் அமைப்பின் படி உடன்பாடு எட்டப்பட்ட சட்டதிட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சட்டரீதியான நிறுவனமானது.

- பிரதேச சபையானது பிரதேச மக்களினால் தமது விருப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களை

கொண்டதுமான, அம் மக்களின் நலன்புரி விடயங்கள் மற்றும் நன்மைக்காக செயற்படுவதுமான, மக்களினால் வழங்கப்படும் பல்வேறான வரிகள் மற்றும் கட்டணங்களினால் செயற்படும் நிதியைக் கொண்டதுமான, சட்டரீதியான அனுமதியோடும் மக்கள் சேவைக்கென அந் நிதியை பயன்படுத்தக்கூடியதுமான நிறுவனமாகும். பி.ச. சட்டம் 129 வது உறுப்புறை (1) மற்றும் (2).

- பிரதேச சபையினால் முன்மொழியப்படும் நோக்கம், பொறுப்புக்கள், கடமைகள், அவற்றுக்குறியதான செயற்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டு இருப்பதனால் முழுமையாகவே சபை நடவடிக்கைகளை சட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றல்.
- சபையின் அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக அனுபவம் மற்றும் தகைமைகளைக் கொண்ட ஊழியர் குழு ஒன்று காணப்படல்.
- ஊழியர்களின் சம்பளம் ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக சட்ட ரீதியான நிதி காணப்படல்.
- பிரதேச சபையின் நிதி, வருமானம், மற்றும் செலவுகள் விதிகள் மற்றும் பிரதேச சபையின் நிதிச் சட்டங்களின் அடிப்படையில் நிர்வாகம் செய்யப்படுவதாக.
- கணக்காய்வாளரினால் பிரதேச சபையின் கணக்குகள் (வரவு மற்றும் செலவு) கண்காய்விற்கு உட்படுத்துதல் அதனூடாக பாராளுமன்றத்திற்கு பொதுமக்களுக்கு பொறுப்புடையதாகவும் பொறுப்புக் கூறுவதாகவும் கட்டுப்பட்டிருத்தல்.

பிரதேச சபை சட்டத்தை தவிர பாராளுமன்றத்தினால் உடன்பாடு எட்டப்பட்ட சட்டத்திட்டங்கள் மற்றும் மாகாண சபையினால் உடன்பாடு எட்டப்பட்ட நிதிச் சட்டங்கள் பலவற்றினால் பிரதேச சபைக்கு சிற் சில கடமைகள், செயற்பாடுகள் மற்றும்

அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்தும் நபராக பிரதேச சபையின் தலைவர் காணப்படுவதால் அச் சட்ட திட்டங்கள் தொடர்பாக அவருக்கு போதிய தெளிவிருத்தல் அவசியம்.

1915 19ம் இலக்க வசிப்பிட மற்றும் நகர அபிவிருத்திச் சட்டம்.

1978 41ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைசட்டம்.

1969 15ம் இலக்க தொந்தரவு கட்டளைச் சட்டம்

1980 2ம் இலக்க உணவுச் சட்டம்

1861 10ம் இலக்க பெருந்தெருக்கள் சட்டம்

1893 9ம் இலக்க மாடுகளை வெட்டும் கட்டளைச் சட்டம்

1946 12ம் இலக்க களியாட்ட கட்டளைச் சட்டம்

இங்கு குறிப்பிடப்படுவது அச்சட்டங்களில் சில சட்டங்கள் மாத்திரமாகும் அதேவேளை இச்சட்டங்களின் கீழ் நிபந்தனைகள் மற்றும் உப யாப்புக்களும் ஏற்படுத்தப்பட்டு இருப்பதால் அது தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும்.

**உபதலைவரின் கடமைகள்**

தலைவரைப் போலவே உபதலைவருக்கும் பொறுப்புக்கள் காணப்படுகின்றது. சபையினால் குறிப்பிட்ட கடமைகள் சில ஒப்படைக்கப்பட்டிருந்தாலோ ஒழிய பிரதேச சபையின் உபதலைவருக்கு வழங்கப்பட்டிருக்கும் கடமையாவது தலைவர் இல்லாத சந்தர்ப்பத்தில் நிறைவேற்று நபருக்கு பதிலாக செயற்படுவதாகும்.

பிரதேசசபை சட்டத்தின் அடிப்படையில் தலைவர் இல்லாத சந்தர்ப்பத்தின்போது உபதலைவர் பொதுச் சபை கூட்டத்திற்கு தலைமைவகிக்க வேண்டியதோடு தலைவரோடு சிறந்த தொடர்பாடலையும் நல்ல மனப்பாங்குடனும் செயற்பட வேண்டும்.

தலைவர் மற்றும் உபதலைவருக்கிடையில் காணப்படும் சிறந்த தொடர்பாடலானது சபையின் சிறப்பான செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமையும். அதே போல் பிரதானிகள் இருவருக்கிடையிலும் அன்னியோனிய நம்பிக்கை மற்றும் கௌரவம் மிக மிக முக்கியமானது.

**உறுப்பினர்களின் கடமைகள்**

மக்கள் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் மற்றும் உப தலைவரைப் போலவே பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்படும் அனைத்து உறுப்பினர்களும் சபையின் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு மேலதிகமாக மிக விரிவான கடமைகள் காணப்படுகின்றன.

சபையின் பொதுச்சபை மற்றும் செயற்குழு கூட்டங்களில் தொடர்ச்சியாக பங்குபற்றி கலந்துரையாடப்படும் விடயங்கள் தொடர்பாக மிகச் சரியானதும் பிரதேசத்திற்கு தேவைப்படும் தேவைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்களை ஏற்படுத்தி மக்களது பங்களிப்பிற்கு கூடுதல் சந்தர்ப்பம் ஏற்படுத்தும் வகையில் சபையில் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டிற்கு செயல் ரீதியாக பங்களிப்பை பெற்றுக்கொடுப்பது ஒவ்வொரு உறுப்பினரினதும் கடமையாகும். அங்கு எட்டப்படும் தீர்மானங்கள் தமது அதிகார பிரதேசத்திலுள்ள மக்களின் நன்மைக்குரியதாக அமைய வேண்டும்.

கூடுதலான மக்கள் பங்கிளிப்பின் கீழ் பிரதேச மக்களின் பொது தேவைப்பாடுகளை இனம் கண்டு உரிய தேவைப்பாட்டு ஆய்வின் பின்னர் அத்தேவைப்பாடுகள், காணப்படும் நிதி மற்றும் ஏனைய வளங்களின் அடிப்படையில் முன்னுரிமைபடுத்திக் கொள்ள வேண்டும்.

பிரதேச சபையின் வலுவான செயற்பாட்டிற்காக உறுப்பினர்களின் செயற்பாட்டு பங்களிப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய நேரடியான நிறுவன கட்டமைப்பாக செயற்குழு முக்கியத்துவம் பெறுகின்றது. பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மாணம் எடுக்கும் செயற்பாட்டில் மிக முக்கிய கடப்பாடுகளை கொண்ட செயற்குழு

சட்டம் உறுப்பினர்களுக்கு மிக முக்கிய சந்தர்ப்பமாகும். இதற்கென உறுப்பினர்களின் தொடர்ச்சியான மற்றும் செயல் மிக்க பங்களிப்பானது அவசியமான ஒன்றாகும்.

சபையின் சிறப்பான உள்ளூராட்சி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக மக்கள் பிரதிநிதிகளாகிய உறுப்பினர்களுக்கு விசேட கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கென அவர்கள், தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டிற்கு உரிய பங்களிப்பை பெற்றுக் கொடுப்பது இன்றியமையாதது ஆகும். அதே போல இதனூடாக பிரதேச சபையின் நிர்வாகம் தொடர்பான காரணங்களை தேடிப்பார்ப்பதற்குமான ஒரு சந்தர்ப்பம் உறுப்பினர்களுக்கு கிடைக்கும்.

பாரிய அளவில் காணப்படும் மக்களின் தேவைப்பாடுகளுக்கிடையில் முன்னுரிமைபடுத்தல்களை மேற் கொண்டு அவற்றிற்கு தேவையான அடிப்படைத் தகவல்கள் மற்றும் தரவுகள் தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். சபைக்குரிய ஆளணி வலு மற்றும் நிதிவளங்கள் தொடர்பாக சரியான தெளிவு இருத்தல் மிக அவசியமானதாகும். செயற்குழு இப்பின்னணியை மேற் கொள்வதற்கு சிறந்த ஒரு சூழலை ஏற்படுத்தும். அதேபோல் சபையின் கடமை செயற்பாட்டு விருத்தியை மேற்கொள்வதற்கும் முக்கிய கடமையை இது மேற்கொள்ளும். எனவே அனைத்து உறுப்பினர்களும் செயற்குழுவில் காணப்படும் இவ்வனுகூலங்களுடாக உச்ச பயன்பாட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.

**மக்கள் பங்களிப்பு**

மக்கள் பிரதி நிதிகள் தொடர்பில் தமது அதிகார பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு பெரும்பாலான எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றது. இம் மக்களது எதிர்பார்ப்புகளை அடையாளம் காண்பதற்கும் அதனுடாக பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டத்தை தயாரித்துக் கொள்வதற்கும் மக்களது பங்களிப்பானது மிகவும் அவசியமானதாகும். இது மக்கள் பிரதிநிதிகளுக்குரிய விசேட பொறுப்பாகும்.

இதற்கென தமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை வெவ்வேறாக அடையாளம் கண்டு அதற்கென பரவலானதும் நெருக்கமான மக்களது பங்களிப்பும் கிடைக்கக் கூடியவகையில் உறுப்பினர்கள் செயல்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவதனூடாக மக்களது பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கான தலைமைத்துவத்தை வழங்க வேண்டிவரும். இது தமது சபையினதும் பிரதேசத்தின் நல்லாட்சிக்கும் மிக முக்கியமானது.

## பொறுப்புக் கூறல் (Accountability)

சபையினதும் பிரதேசத்தின் நல்லாட்சியை ஏற்படுத்திக் கொள்வதற்கும், பிரதேச சபையின் தலைவர் உட்பட மக்கள் பிரதிநிதிகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் மிக விசேட கடமையானது சபையினால் மேற் கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் தொடர்பாக பொறுப்புடனும் நெகிழ்வுத் தன்மையுடனும் தமது மக்களுக்கு பதில் கூறுவதற்கு உடன்பட்டிருப்பதாகும். (Transparent and Accountable)

பிரதேச சபையின் மக்கள் பிரதி நிதிகள் பிரதானமாக மூன்று தரப்பினர்களுக்கு பொறுப்பு கூற வேண்டும்.

1. மக்களுக்கு
2. நிதிவளங்களை வழங்கும் நிறுவனங்களுக்கு மற்றும்
3. கணக்காய்விற்கு

### மக்களுக்கு பொறுப்புக் கூறுதல்

சபையில் மக்கள் பிரதிநிதிகள் பிரதானமாக தம்மை தெரிவு செய்த மக்களுக்கு மூன்று வகைகளில் பொறுப்புக் கூற வேண்டும்.

1. **சேவைகளை உரிய முறையில் வழங்கள்:-**

   மக்களுக்கு வழங்கப்படும் மக்கள் சேவைகளில் செயல் திறன், பிரதிபலன், நியாயமான சேவைகளினால் பயன்பாடு பெறும் பெறும் பிரதேசத்தின் அளவு போன்ற காரணிகள்

தொடர்பில் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும் அதே போல் வழங்கப்படும் சேவைகளானது உயர்ந்த தரத்திலும் அதிகப்படியானோர் பயன்பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது சபையின் பொறுப்பாகும்.

**2. நிதியை செலவு செய்தல்:-**

மக்களிடமிருந்து கிடைக்கும் வரி நிதி தொடர்பாக மக்கள் பிரதி நிதிகள் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும் சபைக்கு கிடைக்கும் நிதி வளங்களை உச்ச பயன்பாடு பெறும் வகையில் பயன் படுத்துவதும் நிதி முகாமைத்துவம் தொடர்பில் காணப்படும் சட்ட திட்டங்கள் மற்றும் நிர்வாக கட்டளைகளை உரிய முறையில் பின் பற்றுவதும் இங்கு இன்றியமையாதது. சேவை வழங்கல் தொடர்பில் நிதிச் செலவானது உயரிய நெகிழ்வு தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**3. வருமானங்களை ஈட்டிக்கொள்ளல்:-**

சபைக்கு அறவிட்டுக் கொள்ள வேண்டிய அனைத்து வருமானங்களையும் சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் மக்களிடத்தில் தெளிவான நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பிலும் மக்கள் பிரதி நிதிகள் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

மக்களுக்கு பொறுப்புக்கூறுவதை சரியான முறையில் மேற்கொள்ள முடிவது அதற்குரியதான கீழ் குறிப்பிடப்படும் அடிப்படை தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதன் மூலமே

## நெகிழ்வுத்தன்மை (Transperancy)

மக்களால் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் மக்கள் அமைப்பான பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு

உண்டு. அதேபோல் அந்த நடவடிக்கைகள் தொடர்பான எந்தவொரு ஆவணத்தையும் பார்வையிடும் உரிமையும் காணப்படும் அதேவேளை இவ்விடயம் சபையின் தவிசாளர் உட்பட அனைத்து மக்கள் பிரதி நிதிகளினதும் கடமையாக இருப்பது மட்டுமன்றி இவ்விடயமானது பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) சட்டம் 14 (3) 11ம் உறுப்புரை வரவு செலவுத்திட்டம். இதற்கென நடவடிக்கைகளை மேற்கொள்வது மக்கள் பிரதிநிதிகளினதும் சபையினதும் பிரதான கடமையாகும். தாம் பிரதி நிதித்துவப்படுத்தும் பொதுமக்களுக்கு தம்மைப்பற்றி தெளிவான, நம்பிக்கை ஏற்படுத்தும் பொறுப்புக் கூறும் வகையிலான விடயங்களை மேற்கொள்வது மிக மிக முக்கியம்.

அதே போல் பிரதேச சபை பின்பற்றும் நிர்வாக கட்டளைகள் தொடர்பாகவும் ஒவ்வொரு சேவைப்பிரிவு தொடர்பாகவும் பிரதேச சபையினூடாக உரிய சேவையை பெற்றுக் கொள்ளும் வழிமுறை மற்றும் அதற்குரிய பொறுப்பான அதிகாரிகள் பற்றியும் மக்களை தெளிவுபடுத்த வேண்டும். இதற்கென சபையினால் பெற்றுக் கொடுக்கப்படும் சேவைகள் தொடர்பான விடயங்கள் உள்ளடங்கிய விபரக் கையேடு ஒன்றை பொதுமக்களால் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் தயார் செய்து மக்களுக்கு வழங்க வேண்டும். சபையின் நெகிழ்வுத்தன்மையை அதிகரிப்பதற்கு இது மிகவும் பயனுடையதாகும். தற்போது சில பிரதேச சபைகள் இச் செயற்பாட்டை சிறப்பான முறையில் செயற்படுத்துகின்றன.

நெகிழ்வுத்தன்மை மற்றும் நேர்மைத்திறன் (Transperancy and Intergriity) பற்றி அறிந்து கொள்வதற்கு காணப்படுகின்ற இன்னுமோர் அளவு கோல் சபையின் நிர்வாக நடவடிக்கைகள் உரிய நிர்வாக கட்டளைகளின் படி மேற்கொள்வதேயாகும். அதாவது ஊழியர்களை இணைத்துக் கொள்ளல் (Recruitment) பிரசித்த அறிவித்தல் ஊடாக விண்ணப்பப்படிவங்களை பெற்று, நேர்முகத் தேர்வின் ஊடாக ஆற்றல், அறிவு மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும். அதிகாரிகளின் பதவி உயர்வு (Promotion) தொடர்பிலும் இவ்வாறே சபைக்கு சேவை மற்றும் வளங்களை கொள்வனவு செய்யும் போது (Purchases of

Goods and Services) சபையின் கட்டுமான மற்றும் பராமரிப்பு (Construction and Maintenance) போலவே நிர்மாண ஒப்பந்தங்கள் (Contracts) மேற்கொள்ளும் போதும் தேசிய மட்டத்தில் பின்பற்றப்படும் வழிகாட்டல்களின் அடிப்படையில் (உதாரணம்: விலைமனுக் கோரல்) மேற்கொள்வதற்கு தவிசாளர் உட்பட பிரதிநிதிகள் செயற்பட வேண்டும். இவ் அனைத்து செயற்பாடுகளும் மக்களின் நம்பிக்கையைப் போலவே நெகிழ்வுத் தன்மையை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக அமையும்.

அதே போல் மக்களுக்கும் பிரதேச சபைக்குமிடையிலான இடைவெளியை இல்லாமல் செய்வதற்கு, குறைப்பதற்கோ, பிரதேச சபையானது மக்களுடன் நேரடியாக தொடர்ப்புபடும் ஒரு அமைப்பாக மாற்ற வேண்டிய அதேவேளை அதற்கென நட்பு ரீதியான கலந்துரையாடல்களை ஏற்படுத்துவது மிக முக்கியமானதாகும் இங்கு மக்கள் பிரதி நிதிகள் மக்களுடனான சந்திப்புக்களையும், செவிமடுப்பையும் (Public Meetings and Hearings) தொடர்ச்சியாக மேற்கொள்வது முக்கியம். அவ்வாறான நடவடிக்கைகள் மூலம் சபை நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் தெளிவு பெறல், மக்களுடைய கருத்துக்களுக்கும் எண்ணங்களுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தல் சபையில் எதிர்பார்க்கப்படும் வேலைத்திட்டங்கள், விசேட செயற்திட்டங்கள் தொடர்பாக மக்களுடைய கருத்துக்களை அறிந்து கொள்ளமுடியும். சபையினால் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் செயற்பாடுகளின் முன்னேற்றம், எதிர்பார்க்கும் வரி, மற்றும் வரி அதிகரிப்பு, புதிய வருமான வழிகள் போன்றவை தொடர்பாக மக்களுடைய கருத்துக்களை பெறக் கூடியதாக இங்கு காணப்படுவது விசேட அம்சமாகும். அதே வேளை பங்களிப்பு முறையிலான செயற்பாடுகளின் முன்னேற்றத்தையும் காணலாம். இங்கு மறைந்து காணப்படும் சாதகமான விடயம் என்னவெனில் மக்களுக்குள் கட்டியெழுப்பப்படும் நம்பிக்கை மற்றும் உறவானது வரி செலுத்துவதை ஊக்குவிக்கும் ஒரு காரணியாக செயற்படுவதாகும். கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக் கொண்ட மக்களது கருத்துகள் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்தன என்ற கருத்து மக்களால் உணரப்படுவதால் வரி செலுத்துவோர் சபையின் அபிவிருத்தி

செயற்பாட்டிற்கு பங்குதாரர் ஆதல் இதன் மூலம் இடம் பெறும் (உதாரணம் வரி அறவிடுவதற்கும் பங்குபற்றுதல்) நீண்ட கால பிரதிபலன்களை பெறக்கூடிய இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஆரம்பப்பங்களிப்பை பெற்றுக் கொடுத்து வழிகாட்டவேண்டியது தலைவர் உற்பட அனைத்து மக்கள் பிரதி நிதிகளுமே ஆவர்.

பிரதேசசபையின் வருடாந்த வரவு செலவு திட்ட வெளியீடு மற்றும் செயற்பாட்டு முன்னேற்ற அறிக்கை மக்களுக்கு பெற்றுக் கொடுத்தலானது சபையின் நெகிழ்வுதன்மையை வலுவூட்டும் தன்மையை இன்னொரு காரணியாகும். அதனூடாக எஞ்சியிருக்கும் செயற்பாடுகளுக்கு தமது வரி நிதியை செலுத்துவனூடாக சபைக்கு கிடைக்கப்பெறும் வருமானங்களையும் தம்மால் வழங்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டத்திற்காக சபையானது செலவு செய்ய தயாராகவுள்ள நிலைதொடர்பாக வரி செலுத்துவோர் என்ற வகையில் மக்களுக்கு தெளிவு ஏற்படும் அதேவேளை அவர்களுக்குள் சுய அபிமானமும் ஏற்படும். அதே போல் தமது வரி நிதியினால் செய்யக்கூடிய செயற்பாடுகள் மற்றும் பிரதிபலன்கள் தொடர்பான மக்களுக்குள் உணர்வுத்தன்மையும் ஏற்படும். அதனூடாக மக்கள் பிரதி நிதிகள் மக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய அதேவேளை பொறுப்புடனான கடமைகளை நிறைவேற்றவும் சபையின் அபிவிருத்தி திட்டத்தில் செயற்பாட்டு முன்னேற்றம் தொடர்பாக கருத்துரைகளை தெரிவிப்பதற்கும், மக்களுக்கும், மக்கள் பிரதி நிதிகளுக்கும் சபை ஊழியர்களுக்கும் சிறந்ததொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

மக்கள் பிரதிநிதிகள், மக்களிடமிருந்து கிடைக்கும் வரிப்பணத்திற்கும் அரசினால் கிடைக்கும் ஒதுக்கீடுகளுக்கும் ஏனைய நிறுவணங்களிடம் இருந்து கிடைக்கும் உதவிகள், நிதி அன்பளிப்புகள் அல்லது கடன்களுக்கும் பொறுப்புக்கூறும் அதேவேளை நெகிழ்வுத்தன்மையுடன் கடமையாற்ற வேண்டும். பிரதேச சபை சட்டத்திலும் அரசியலமைப்பிலும் மிகத் தெளிவாக தெரிவிக்கப்பட்டதன் படி பிரதேச சபை நடவடிக்கைகள் அரசாங்க கணக்காய்வாளரினால் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பின் 154 மற்றும் பிரதேச சபை 172 உறுப்புரைகள். அதன்படி கணக்காய்விற்கு பொறுப்புக் கூறவும், அனைத்து நிதி நடவடிக்கைகளும் சட்டத்தின் படி மேற்கொள்வதற்கும் தலைவர், பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் உட்பட அனைத்து பிரதேச சபை தரப்பினரும் சட்டத்தினால் உடன்பட்டிருப்பதோடு அப்படி இடம்பெறவில்லை எனில் தமது வாழ்நாள் முழுவதும் கூடுதல் கட்டணம் (Surcharge) செலுத்துவதற்கு கட்டுப்பட்டிருப்பதை தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அரசியலமைப்பு சட்டம் 172 (3) உறுப்புரை.

மேலும் நெகிழ்வுத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறுதலை உறுதிப்படுத்துவதற்கு ஜனநாயக வழியிலான செயற்பாடுகளைக் கொண்ட பிரதேச சபையின் வலுவான நிலைக்கு தலைவர் மற்றும் பிரதிநிதிகளின் முன்மாதிரியான செயற்பாடுகள் மிகவும் இன்றியமையாதது. இதற்காக சபைக்கேயுரிய முறையிலான ஒழுக்க நெறிகளை (Code of Ethics) ஏற்படுத்திக் கொள்வதற்கும், அதற்கென சிறந்ததொரு வழிமுறையொன்றை தயாரிப்பதற்கும், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்கள் அதன்படி நடந்து கொள்ளவும் வேண்டும்.

தமது அதிகாரப் பிரதேசத்தில் வரி செலுத்தும் மக்களுக்கு நெருக்கமான நிர்வாக அமைப்பாக பிரதேச சபையினால் தமது மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை சிறப்பான முறையல் பெற்றுக் கொடுப்பதற்கும், அதனூடாக சபை தொடர்பாக மக்களின் கௌரவம் மற்றும் வரவேற்பையும் பெறுவதற்கு சிறந்த செயற்பாட்டு மட்டத்தைப் பேணிக் கொள்வதற்கும், மக்கள் பிரதி நிதிகளின் முன் ஆயுத்தம், அறிவு மற்றும் நடத்தை போன்றவை இன்றியமையாததாகும். எனவே தமது பிரதேச சபையின் கட்டமைப்பு, இலக்கு, பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் எல்லைகள், பயனாளிகள், சபைக்குறிய வளங்கள், அதிகாரிகளின் ஆற்றல், நிர்வாக ஆற்றல் என்பவற்றோடு ஏனைய நிறுவணங்கள் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அதேபோல் நிர்வாகத்துடன் தொடர்புடைய நிதிச் சட்டங்கள் (Financial Regulations, நிர்வாக சட்டங்கள் Administrative Regulations, தேசிய

வழிகாட்டல்கள் (National Procurement Guidelines), நிறுவணக் கோட்பாடுகள் (Establishment Code) தொடர்பான பூரண அறிவை பெற்றுக் கொள்ள வேண்டும்.

சபையின் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் தலைவர் உட்பட பிரதிநிதிகளின் பொறுப்புக்களும் கடமைகளும் பல்வேறு விதமாக காணப்படும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். அப்படியாயின்,

- முகாமையாளர்களாக செயற்படல்
- மக்கள் தொடர்பு அதிகாரிகளாக செயற்படல்
- சமூகத் தலைவர்களாக செயற்படல்
- அரசியல் பிரதிநிதிகளாக செயற்படல்
- நிறுவணக் கொள்கை மற்றும் யாப்பு தயாரிப்பு
- நிறுவண செயற்பாடு தொடர்பிலான தீர்மாணம் எடுத்தல்
- தீர்மாணங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

இவ் அனைத்து பொறுப்புக்களும் சபைத் தலைவர், பிரதிநிதிகள் மற்றும் நிறுவண ஊழியர்களின் கடமையாக இருப்பதோடு, அக்கடமைகளை சிறப்பாகவும் முன்மாதிரியாகவும் மேற்கொள்வது பிரதேச சபைக்கு இன்றியமையாத ஒரு விடயமாகும்.

யக்கலமுள்ள பிரதேச சபை - காலி மாவட்டம் 2011 ஆகஸ்ட்





வனாதவில்லுவ பிரதேச சபை - புத்தளம் மாவட்டம் 2011 ஆகஸ்ட்



பேருவளை பிரதேச சபை - களுதரை மாவட்டம் 2011 ஆகஸ்ட்







குருவிட பிரதேச சபை - இரத்தினபுரி மாவட்டம் 2011 ஆகஸ்ட்



